5. அறிவிப்புகள்.

(அ) இறுதித் துணை நிதிக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1973–74 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதி அறிக்கை இன்று பேரவைக்கு அளிக்கப்பட்டுள்ளது. அதில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானம் கொடுக்க விரும்பும் உறுப்பினர்கள் அவைகளை 27—3—1974, புதன்கிழமை மாலை 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

(6) 1974-75-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

" நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 15,87,34,600-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

திரு. மணலி சி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நீர்ப் பாசனத்தை சாகுபடி ஆரம்பக் கட்டத்திலிருந்தே சிக்கனமாக முறைவைத்து விடுவது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,87,34,600-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கொடகனாறு திட்டத்திற்கு மத்திய அரசின் ஒப்புதல் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 35—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 15,87,34,600-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.